**மாவட்ட  உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,திருச்சுழி.

2024 ம் ஆண்டு  பிப்ரவரி மாதம் 15 ம் நாள் வியாழக்கிழமை.

**இடைநிலை மனு எண்.1/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.1/2024**

---

வேலுச்சாமி ....மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதியான,
விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்
2.வருவாய் வட்டாட்சியர்,
திருச்சுழி தாலுகா,
திருச்சுழி
3.கிராம நிர்வாக அலுவலர்,
எம்.புதுக்குளம் ......எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 02.01.2024–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றே மனு கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்நீதிமன்றத்தில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், கடந்த 14.02.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, எதிருரை, இருதரப்பு வாதம் ஆகியவற்றை ஓர்வு செய்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த மனுவில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன்–படி அசல் வழக்கில் தாவா சொத்தில் மனுதாரர்/ வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவர் உள்ளிட்ட கட்டுமானங்களை எதிர்மனுதாரர்கள்/

பிரதிவாதிகளோ இடிக்கவோ, அப்புறப்படுத்தவோ கூடாது என்று எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது இம்மனு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்க கோரியும், இவ்வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக் கட்டளை வழங்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல்.

**<u>2. மனுதாரர் மனுவின் சுருக்கம்</u>:–**

2(1). மனுதாரர்/வாதி தரப்பில், தாவாச் சொத்தும், அதற்கு கிழக்கே உள்ள சொத்தும் ஆதியில் பிச்சைத் தேவர் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்தார். அவர் இறந்தபிறகு அவருடைய மக்கள் கருப்பையா –1, வேலாயி–2, வேலுத்தேவர்–3 ஆகிய மூன்று பேர்களும் மேற்படி சொத்தை வாரிசு கிரமப்படிக்கு பாத்தியம் அடைந்து வாக்கரலாக பாகம் செய்து கொண்டார்கள். அத்தகைய பாகத்தில் மொத்த சொத்தான கிழமேல் 21 1/2 அடியும், தென்வடல் 35 அடியும் அளவுள்ள சொத்தானது மனுதாரர்/வாதியின் தாத்தா கருப்பையாதேவர் பாகத்திற்கு கொடுக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்தார். வேலாயி மற்றும் வேலுத்தேவர் ஆகியோர்கள் தங்கள் பாக ஈவுக்கு தொகைகள் பெற்றுக் கொண்டு மொத்த சொத்தில் தங்களுக்கு எந்த பாகமும் வேண்டாம் என்று விலகிக் கொண்டு விட்டார்கள். கருப்பையா இறந்தபிறகு அவருடைய மக்களான மனுதாரர்/வாதியின் தந்தை சுப்பிரமணியனும், சித்தப்பா குருசாமியும் வாக்கரலாக பாகம் பிரித்துக் கொண்டார்கள். அத்தகைய பாகத்தில் மேற்படி மொத்த சொத்தும் மனுதாரர்/வாதியின் தந்தை சுப்பிரமணியன் பாகத்திற்கு கிடைத்து அவர் குப்பை போட்டும், ஆடு கட்டியும், தாழ்வாரம் இறக்கியும் அனுபவித்து வந்தார்.

2(2). கடந்த 2000ம் ஆண்டு மனுதாரர்/வாதியும், அவரது தகப்பனாரும் வாக்கரால் பாகம் பிரித்துக் கொண்டதில் தாவா சொத்தும், அதற்கு கிழக்கே உள்ள சொத்தும் சேர்த்து கிழமேல் 21 ½ அடியும், தென்வடல் 35 அடியும் அளவுள்ள சொத்து மனுதாரர்/வாதி பாகத்திற்கு கிடைத்து அதுமுதல் மனுதாரர்/வாதி அனுபவித்து வருகின்றார். தாவாச் சொத்து உள்ளிட்ட மொத்தச் சொத்தானது

சர்வே எண் 378/5 க்கு மனுதாரர்/வாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு உள்ளது. கடந்த 2010 ம் ஆண்டில் தாவாச் சொத்திற்கு கிழக்கே மனுதாரர்/வாதி சென்ட்ரிங் வீடு கட்ட உள்ளார். மேலும் அதே கால கட்டத்தில் தாவாச் சொத்தில் சுற்றுச்சுவர் கட்டி தென்பகுதியில் ஆடு, மாடு கட்ட தோதாக சிமிண்ட ஆஸ்பெட்டாஸ் சீட் போட்டு செட் கட்டி ஆடுகள் கட்டி அனுபவித்து வருகின்றார். தாவாச் சொத்திற்கும் சேர்த்து மனுதாரர்/வாதி வீட்டுவரி கட்டி ரசீது பெற்று வருகின்றார். மனுதாரர்/வாதியின் சின்ன தாத்தாவான வேலுத்தேவர் மகன் ரவிச்சந்திரன் என்பவரும், அவருடைய கூட்டாளி கிருஷ்ணன் என்பவரும் தாவாச் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரர்/வாதி மீது அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண் 148/2011 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள். ரவிச்சந்திரன் தாக்கல் செய்த வழக்கு கடந்த 27-11-2019 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

2(3). மனுதாரர்/வாதி கட்டியுள்ள காம்பவுண்டு சுவர் ஆக்கிரமிப்பு என்றும், அதை இடிக்க வேண்டும் என்றும், மனு கொடுத்து அரசை நிர்பந்தம் செய்து வருகின்றார். அத்தகைய பொய்யான நிர்பந்தத்தின் காரணமாக தொடர்ந்து வருவாய் துறையினர் சர்வே எண் 378/5 மொத்த விஸ்தீரணம் 60 சதுரமீட்டரில் மேற்கு பக்கம் 14 சதுரமீட்டர் நான் சுற்றுச்சுவர் கட்டியுள்ள பகுதி ஆக்கிரமிப்பு என்றும், அதை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று வருவாய் ஆய்வாளர் 24-03-2023 ம் தேதியில் மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளார். 28-12-2023 ம் தேதியில் திருச்சுழி வருவாய் வட்டாட்சியர் அதே போல் மற்றொரு மேலும் கடந்த அறிவிப்பை அனுப்பி உள்ளார். முன் வழக்கில் தாவாச் சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு தற்போது தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்வது முரண்தடை தோசத்தால் தடை செய்ய்பட்டு உள்ளது. இது குறித்து 27-03-2023 மற்றும் 26-06-2023 ம் தேதிகளில் மனுதாரர்/வாதி வருவாய் துறையினருக்கு பதில் அறிவிப்பும் அனுப்பி இருக்கின்றார். ஓ.எஸ்.எண். 148/2011 தாவாச் சொத்து

மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் மீண்டும் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த போவதாக வருவாய் வட்டாட்சியர் 28–12–2023 ம் தேதியில் அறிவிப்பு செய்து இருக்கிறார். எனவே தாவாச் சொத்தில் உள்ள சுற்றுச்சுவர் கட்டுமானங்களை பிரதிவாதிகளோ, அவர்கள் வகை ஆட்களோ இடித்து அப்புறப்படுத்தக்கூடாது என்று நிரந்த உறுத்துக்கட்டளைக் கோரி மனுதாரர்/வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மறுப்புரை தாக்கல் செய்வதற்காக கடந்த 18.01.2024 ம் தேதி முதல் 14.02.2024 ம் தேதி வரை வாய்ப்புகள் வழங்கப்பட்ட நிலையில் மறுப்புரை தாக்கல் செய்ய முன் வராத காணத்தினால் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிக்கப்பட்டுவிட்டது.

**4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை</u>:–**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. **<u>தீர்வு முடிவு:–</u>**

5(1). மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குரை, மனு மற்றும் இருதரப்பு வாதங்கள் அடிப்படையில் இம்மனு தீர்மானிக்க கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). தாவாச் சொத்தும், அதற்கு கிழக்கே உள்ள சொத்தும் ஆதியில் பிச்சைத் தேவர் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்தார். அவர் இறந்தபிறகு அவருடைய மக்கள் கருப்பையா –1, வேலாயி–2,

வேலுத்தேவர்–3 ஆகிய மூன்று பேர்களும் மேற்படி சொத்தை வாரிசு கிரமப்படிக்கு பாத்தியம் அடைந்து வாக்கரலாக பாகம் செய்து கொண்டார்கள் என்றும். அத்தகைய பாகத்தில் மொத்த சொத்தான கிழமேல் 21 1/2 அடியும், தென்வடல் 35 அடியும் அளவுள்ள சொத்தானது மனுதாரர்/வாதியின் தாத்தா கருப்பையாதேவர் பாகத்திற்கு கொடுக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்தார் என்றும், கடந்த 2000ம் ஆண்டு மனுதாரர்/வாதியும், அவரது தகப்பனாரும் வாக்கரால் பாகம் பிரித்துக் கொண்டதில் தாவா சொத்தும், அதற்கு கிழக்கே உள்ள சொத்தும் சேர்த்து கிழமேல் 21 ½ அடியும், தென்வடல் 35 அடியும் அளவுள்ள சொத்து மனுதாரர்/வாதி பாகத்திற்கு கிடைத்து அது முதல் மனுதாரர்/வாதி அனுபவித்து வருகின்றார் என்றும், மனுதாரர்/வாதியின் சின்ன தாத்தாவான வேலுத்தேவர் மகன் ரவிச்சந்திரன் என்பவரும், அவருடைய கூட்டாளி கிருஷ்ணன் என்பவரும் தாவாச் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரர்/வாதி மீது அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண் 148/2011 என்ற வழக்கை தாக்கல் செய்து 2019ம் தேதியில் வழக்கானது தள்ளுபடி செய்யபட்டது என்றும், மனுதாரர்/வாதி கட்டியுள்ள காம்பவுண்டு சுவர் ஆக்கிரமிப்பு என்றும், அதை இடிக்க வேண்டும் என்றும், மனு கொடுத்து அரசை நிர்பந்தம் செய்து வருகின்றார் என்றும், அத்தகைய பொய்யான நிர்பந்தத்தின் காரணமாக தொடர்ந்து வருவாய் துறையினர் சர்வே எண் 378/5 மொத்த விஸ்தீரணம் 60 சதுரமீட்டரில் மேற்கு பக்கம் 14 சதுரமீட்டர் நான் சுற்றுச்சுவர் கட்டியுள்ள பகுதி ஆக்கிரமிப்பு என்றும், அதை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று வருவாய் ஆய்வாளர் 24.03.2023ம் தேதியில் மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றும், 28.12.2023ம் தேதியில் திருச்சுழி வருவாய் வட்டாட்சியர் அதே போல் மற்றொரு அறிவிப்பை அனுப்பி உள்ளார் என்றும், முன் வழக்கில் தாவாச் சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அரசு தரப்பானது இவ்வழக்கில் முரண்தடை தோசத்தால் தடை செய்யப்பட்டு உள்ளது என்றும் வாதம் முன்வைத்துள்ளார்.

5(3). மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்ததில், ம.சா.ஆ.2 ஆனது அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.148/2011 வழக்கில் ஏற்படுத்தி உள்ள தீர்ப்பாணை ஆகும். ம.சா.ஆ.3 ஆனது அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.148/2011 வழக்கில் ஏற்படுத்தி உள்ள தீர்ப்புரை ஆகும். ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3–ஐ பரிசீலிக்கையில் இவ்வழக்கின் வாதி/மனுதாரருக்கு எதிராக அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு வேலுச்சாமி வகையறாவால் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியவருகிறது. மேற்படி வழக்கின் சொத்துவிபரத்தை பரிசீலிக்கையில் சர்வே எண்.378/5 ல் கண்ட 238 சதுர மீட்டரில் உள்ள காலிமனை இடமாகும். இவ்வழக்கின் சொத்து விபரம் சர்வே எண்.378/5, 60 ச.மீ–ல் 14 ச.மீ ஆகும். ம.சா.ஆ.4 ஆனது சர்வே எண்.378/2005 விஸ்தீரணம் 60 சதுரமீட்டருக்கு வாதிக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு உத்தரவாகும். மேற்படி ம.சா.ஆ.4 ஐ பரிசீலிக்கையில் மனுதாரர்/வாதியான வேலுச்சாமி த/பெ.சுப்பிரமணி பெயரில் சர்வே எண் 378/5 ல் திருச்சுழி வட்டாட்சியர் அவர்களால் 60 ச.மீட்டருக்கு வீட்டுமனை ஒப்படைப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது. ம.சா.ஆ.5 ஆனது மாவட்ட ஆட்சியர் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பு ஆகும். மேற்படி ம.சா.ஆ.5 ஐ பரிசீலிக்கையில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு திருச்சுழி வட்டம், அ.முக்குளம் குறுவட்டம், எம்.புதுக்குளம் குரூப், குறவைக்குளம் கிராமத்தில் வசிக்கும் சுப்பிரமணியன் மகன் வேலுச்சாமி அவருக்கு திருச்சுழி வட்டம், எம்.புதுக்குளம் குரூப், குறவைக்குளம் கிராமத்தில் புல எண்.378/5 ல் 238 ச.மீ அளவிற்கு தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வேலுத்தேவர் மகன் பழனிக்குமார் என்பவர் புகார் அளித்து வருவதற்கும் மேற்படி நிலத்தில் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக திருச்சுழி வட்டம் அ.முக்குளம் வருவாய் ஆய்வாளர் 1995 ஆம் ஆண்டு சென்னை III ஆவது 7 வது

பிரிவின் கீழ் அறிவிப்பு அனுப்பியது தெரிய வருகிறது. ம.சா.ஆ.6 ஆனது திருச்சுழி வட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு ஆகும். மேற்படி ம.சா.ஆ.6 ஐ பரிசீலிக்கையில் கடந்த 28.12.2023 ம் தேதியில் சர்வே எண்.378/5 ஆனது சர்க்கார் புறம்போக்கு காலிமனையில் 60 சதுர மீட்டரில் 14 ச.மீ சுற்று சுவர் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது. ம.சா.ஆ.7 ஆனது தாவாச் சொத்திற்கு உரிய நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு மேற்படி பரிசீலிக்கையில் நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் பழைய சர்வே எண். 300/1 பா வேலுச்சாமி பெயரில் இருந்து பின்பு காலிமனை என்று வகைப்படுத்தப்பட்ட விவரம் தெரிய வருகிறது. ம.சா.ஆ.11 ஆனது சர்வே எண்.378/5 க்கு வாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவாகும். மேற்படி ம.சா.ஆ.11 ஐ பரிசீலிக்கையில் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், எம்.புதுக்குளம் குரூப் கிராமத்தில் வசிக்கும் சுப்பிரமணியன் மகன் வேலுச்சாமிக்கு சர்வே எண்.378/5 பட்டா எண். 570 ல் 60 சதுர மீட்டருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது.

5(4). தாவா சொத்தினை வாதிகளின் தாத்தா பிச்சை தேவருக்கு, பூர்வீகப் பாத்தியப்பட்டு இறங்குரிமை அடிப்படையிலும், பாகப்பிரிவினை அடிப்படையிலும் தமக்கு கிடைக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர்/வாதி குறிப்பிட்டுள்ள நிலையிலும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் படி, மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்தில் பட்டா வழங்கப்பட்டு பின்பு வருவாய் ஆவணங்களின் படி ரத்து செய்யப்பட்டு உள்ள விபரம் தெரிய வருகிறது. இருதரப்பு சங்கதிகளின் வாயிலாக பரிசீலிக்கும் போது தாவா சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என கோருகின்ற நிலையில் அசல் வழக்கில் இருதரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்தி அவர்களது சான்றாவணங்களை பரிசீலித்த பின்னரே முடிவு செய்ய இயலும். அதுவரையில் வழக்கின் இருதரப்பினர்களும் தாவா சொத்தை எவ்வித வில்லங்கத்திற்கும் உள்ளாக்காமல் இருப்பதே சரியானதாகும். வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்களின் தாவா சொத்திலுள்ள சுவாதீனத்தை நிரூபணம் செய்ய இம்மனுவிற்கு போதுமானதாக உள்ளது. வழக்கின் ஒட்டுமொத்த

சங்கதிகளையும், சூழ்நிலைகளையும் கவனத்தில் இறுத்தி பார்க்கும்பொழுது தாவா சொத்தானது மனுதாரர்கள் தனித்த அனுபவத்தில் உள்ளதா? அல்லது ஆக்கிரமிப்புக்கு உட்பட்டதா? இல்லையா? என்பது போன்ற வினாக்களுக்கும் தாவா சொத்தானது வாதிக்கு அவரது தாத்தா பிச்சை தேவர் மூலம், பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கப்பெற்றதா அல்லது மேற்படி தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டதா என்பதையும் அசல் வழக்கின் விசாரணைக்கு பின்பே முடிவு காண இயலும். மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆனது அசல் வழக்கு எண்.148/2011 ஆனது ரவிசந்திரன் வகையறாவால் இவ்வழக்கின் வாதிக்கு மற்றும் அரசு தரப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கின் தீர்ப்புரையில் தூய அடங்கல் பதிவேட்டில் காலிமனை சுழிக்கப்பட்டு 1ம் பிரதிவாதியான (இவ்வழக்கின் வாதி) வேலுச்சாமிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் அரசே 1ம் பிரதிவாதியின் (இவ்வழக்கின் வாதி) அனுபவத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு சாதகமாக பட்டா வழங்கியுள்ளது தெரிய வருகிறது. 1ம் பிரதிவாதியின் அனுபவத்தை அங்கீகரித்து பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தை ஆட்சேபனை செய்ய வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தெரிய வருகின்ற நிலையில், தாவா சொத்தின் பாத்தியம் மற்றும் அனுபவம் குறித்து நீதியின் சமநிலையும், வழக்கின் முதல் தோற்ற ஆதார வழக்கும் மனுதாரரின் நலச் சார்பாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவின் தற்போதைய நிலையே (Status quo) அசல் வழக்கு தீர்ப்பாகும் வரை நீடிக்க வேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கிறது.

## 6. <u>இறுதி முடிவு</u> :

இறுதியாக, மனுவின் முதல் நிலை தோற்றமும், சமநிலை தோற்ற வாய்ப்பும் மனுதாரருக்கு ஆதரவாக உள்ள நிலையில், மனுவின் இருதரப்பினரும் தாவா சொத்தில் மனுதாரர்/வாதி கட்டியுள்ள காம்பவுண்டு சுவர் உள்ளிட்ட கட்டுமானங்களின்

தற்போதைய நிலையே (Status quo) அசல் வழக்கு தீர்ப்பாகும் வரை நீடிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.

*இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி 15ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

ஓம்.G.அபர்ணா, (15.02.2024)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :–** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவாணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.12.2023 | தாவாச் சொத்து அடங்கிய மொத்த வீட்டிற்கு வாதி செலுத்திய வீட்டு வரி ரசீது |
| ம.சா.ஆ.2 | 27.11.2019 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.148/2011 வழக்கில் ஏற்படுத்தி உள்ள தீர்ப்பாணை. |
| ம.சா.ஆ.3 | 27.11.2019 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.148/2011 வழக்கில் ஏற்படுத்தி உள்ள தீர்ப்புரை. |
| ம.சா.ஆ.4 | 02.03.2015 | சர்வே எண்.378/2005 விஸ்தீரணம் 60 சதுரமீட்டருக்கு வாதிக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு உத்தரவு |
| ம.சா.ஆ.5 | 26.05.2023 | மாவட்ட ஆட்சியர் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பு |
| ம.சா.ஆ.6 | 28.12.2023 | திருச்சுழி வட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| ம.சா.ஆ.7 | 15.01.2023 | தாவாச் சொத்திற்கு உரிய நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு |
| ம.சா.ஆ.8 | – | தாவாச் சொத்திற்கு உரிய வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம்–2) |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.9 | – | சர்வே எண்.378 க்கு உரிய புல வரைபடம் |
| ம.சா.ஆ.10 | 26.06.2023 | வாதி வருவாய் துறையினருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு |
| ம.சா.ஆ.11 | 30.08.2016 | சர்வே எண்.378/5 க்கு வாதிக்கு வழங்கப்பட்ட பட்டா |
| ம.சா.ஆ.12 | – | தாவாச் சொத்தையும், வாதியின் வீட்டையும் காட்டக்கூடிய புகைபடங்கள் (எண்ணம்–5) |
| ம.சா.ஆ.13 | – | தாவாச் சொத்தையும், வாதியின் வீட்டையும் காட்டக்கூடிய புகைபடங்களுக்கான குறுந்தகடு |
| ம.சா.ஆ.14 | 04.07.2023 | வட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| ம.சா.ஆ.15 | 27.03.2023 | வாதி வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு |
| ம.சா.ஆ.16 | 24.03.2023 | வாதிக்கு அ.முக்குளம் வருவாய் ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பு |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**</u> :– இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்**</u>:– இல்லை

ஓம்.G.அபர்ணா, (15.02.2024)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.